# கானல் நீர்!

எதையோ வெறித்துப் பார்த்த வண்ணம், விருப்பும் வெறுப்பும் அற்றவனாய் உட்கார்ந்திருந்தான் சின்னச்சாமி. மனத்தில் நிரம்பிய குழப்பங்களுக்கு எங்கே விடை தேடுவது என்பதே அவன் எண்ணமாயிருந்தது. எதையுமே எளிதாய் எடுத்துக்கொள்ளப் பக்குவப் பட்டிருந்த அவன் மனம் இன்று பரிதவிக்கிறது. பணம் காசு தேவை என்பதை அவன் ஒருபோதும் கவலைப் பட்டதில்லை. வெள்ளாமை விளைகிறதோ இல்லையோ, அதனை விடக்கூடாது என்பதில் அவன் தெளிவாக இருந்தான்.

சின்னச்சாமியைப் பொருத்த வரை, வெள்ளாமை செய்வது ஓர் அறம் எனக் கருதுபவன். அவன் எப்போதும் சொல்வது, என்ன கோடிகோடியா சம்பாதிச்சு, கார் பங்களான்னு வாழ்ந்தாலும், எல்லோருக்கும் தேவை மூனு வேளை சோறு மட்டுமே! அதனால் அவனை முழுக்க முழுக்க இடதுசாரி சிந்தனையாளன் என்றோ இல்லை என்றோ கூறமுடியாது. அவன் ஒன்றும் படிக்காதவனோ, தெளிவில்லாதவனோ இல்லை.

கணக்கிலே புலி எனப் பெயரெடுத்தவன், முதுகலை வரை படித்தான். ஐ.ஏ.எஸ் பாஸ் செய்ய வேண்டும் எனும் அவா மட்டும் அவனுக்கு உண்டு. அவன் செயல்படுத்த முனைந்தபோது, அப்போதைய அரசு செய்த மாற்றங்களால் அது ஈடேறாமல் போனது. அவன் படித்த கல்லூரியிலேயே பேராசிரியர் வேலை தேடினான். அதுவும் தள்ளிப் போனதும், வெள்ளாமையே போதும் என்ற முடிவுக்கு வந்தான் சின்னச் சாமி. அவனது அப்பாவும் அந்த காலத்தில், இண்டர்மீடியட் வரை படித்தவர். வேலை தேடும் விவேகம் அவருக்கு இருக்க வில்லை. அவரது தந்தையார் வைத்துவிட்டுப் போன இரண்டு வேலி நிலம் அவருக்கு போதுமானதாய் இருந்தது. கொஞ்சம் தோப்பு துறவு என இருந்தது. சின்னச்சாமிக்கு ஓர் அக்காள், ஒரு தங்கை இருவருக்கும் நல்ல விதமாக மணம் செய்து கொடுத்துவிட்டார் சின்னச் சாமியின் தந்தை.

ஆனால், சின்னசாமிக்கு அவ்வப்போது தேர்வு எழுதும் வழக்கம் இருந்ததால், வங்கி, அரசு சார்ந்த நிறுவனங்களில் வேலை கிடைத்தது. குடவாசலுக்கு அருகே இருந்த அவனது, கிராமத்திலிருந்து, புலம் பெயர்ந்து வாழ்வதும், வெள்ளாமையைக் கவனித்து கொள்வதிலும் எந்த சிரமமும் இருக்காது, எனினும், கல்லூரி பேராசிரியர், அல்லது ஐ.ஏ.எஸ் ஏதாவது ஒன்றுதான் சமூகத்துக்கு சேவை செய்ய முடியும் என்பது சின்னச் சாமியின் சிந்தாந்தம். பேராசிரியர் ஆனால், நல்லதொரு சிந்தனையை விதைத்து மாணவர்களை நெறிப் படுத்தி வெளிப்படுத்தலாம். ஐ.ஏ.எஸ் எனில், அரசாங்க சலுகைகளை அவற்றின் பயனை மனித சமுதாயம் முற்றிலும் அடையச் செய்யலாம் என்பது அவனது கருத்து. இதனை மற்றவர் ஏற்பாரோ இல்லையோ என்பதைப் பற்றியெல்லாம் அவன் கவலைப் படமாட்டான்.

சின்னச் சாமியின் அப்பாவும், அவனது கருத்தை புறந்தள்ள வில்லை. வாழ்வியல் மீது அவரது பார்வை மாறு பட்டது. பிறப்பொக்கும் எனும் வள்ளுவர் கூற்றை போற்றி பின்பற்றி வாழ்ந்தவர் அவர். உயிர்கள் யாவுக்கும் உலகம் பொதுவானது, உரிமையானது என்பார். மனிதனே தன்னை உயர்வாகக் கருதிக்கொண்டுள்ளான் என்பார்.

சின்னச் சாமி எதைகேட்டாலும் அதற்கு உரிய விளக்கம் தருவான். கும்ப கோணத்துக்கு தோரண வாயில் போல் அமைந்ததால் தான், அவ்வூர் குடவாயில் ஆனது. காலப் போக்கில் குடவாசல், கொடவாசல் ஆனது என்பான்.

சிந்தனை வயப்பட்டிருந்த, வீட்டு சாய் மானத்தில் சாய்ந்து அமர்ந்திருந்த சின்னச்சாமியை ஒரு குரல் எழுப்பியது, அது அவனது பால்ய நண்பன் ஜெயசங்கரன். அரசு பணியிலிருந்தவன், பணி நிறைவுக்குப் பின் சொந்த கிராமத்துக்கு வந்து விட்டான். உத்தியோகம் புருஷ லஷ்ணம் எனும் சிந்தையோடு வேலைக்குச் சென்றான் ஜெயசங்கரன். படிப்படியாக பதவி உயர்வு கொண்டு, பணி நிறைவு கண்டவன். அவனுக்குள்ளும் சில சித்தாங்கள் உண்டு. நாம் வாங்கும் ஊதியம் மக்களின் பணம். நாம் பாது காக்க வேண்டிய வரிப்பணம், அது மக்களுக்கானது. ஏழைத் தொழிலாளி உடல் வலி போக்க அருந்தும், மதுபானத்தின் மீதான வரியிலிருந்து தான் நாங்கள் சம்பளம் பெறுகிறோம் அதனை நினைவு கொள்ள வேண்டும் என்பது ஜெயசங்கரனின் சித்தாந்தம். இதனால் இவ்விருவரது நட்பு தொடர்ந்து நிலைத்ததில் ஆச்சரியமில்லை.

‘‘என்னப்பா ஆயிற்று சின்னச் சாமி ஆழ்ந்த யோசனை? எதையுமே பெரிது படுத்த மாட்டாயே! என்ன பிரச்சினை?’’

‘ஒன்றுமில்லையப்பா, என் மூத்த மகன் கடனா செல்லப் போவதாக கூறுகிறான், அங்கேயே நிலையாக தங்கிவிட முடிவு செய்வானோ என ஐயப்படுகிறேன்’.

‘‘முதலில் செல்லட்டும் அப்புறம் பார்க்கலாம்’’

‘இல்லையப்பா, அந்த நாட்டு கலாச்சாரம் கடன் அட்டையில் மிதப்பது. தேவையோ தேவையில்லையோ கடன் வாங்குவாங்க’

‘‘சின்சு நீ சொல்றது, அமெரிக்கா’’

‘அமெரிக்கா என்ன கனடா என்ன? நம்ம ஊரு போலாகுமா? வேண்டாம்னு சொன்னா கேக்கலே. என் மூத்த மருமகள் சொல்றா, மாமா மேலே மேலே போகனும் நாமன்னு. எனக்கு ஒன்னுமே புரியலே!. அது என்ன மேலே மேலே போறதுன்னு. சாப்பிடப் பொறது, ஒரு பிடி சோறு. எல்லோருக்கும் தேவை அதுதானே!’

‘‘எல்லாத்தையும் காலம் மாற்றும்’’ னு ஜெயசங்கரன் சொல்ல, ‘அவுங்க முடிவு செஞ்ச பின்னால, நமக்கு அவுங்க சொல்ல நினைக்கிறது. இன்பர்மேஷன் போலத்தான்.’ என்றான் சின்னச்சாமி.

அதான்பா, அரசாங்கத்துல, பார் இன்பர்மேஷன் னு போட்டு வெச்சு கீழே இருக்கிற ஆபீஸர் தப்பிக்க பாக்குற மாதிரி என்ற ஜெயசங்கரனின் கருத்து, சின்னச்சாமிக்கு சிரிப்பை மூட்டியது.

ஏம்பா, சின்சு, உன் சின்ன மகன் பக்கத்துலேயே இருக்கான், பெண்ணும் அடிக்கடி வந்து போறா, அப்புறம் என்ன கவலை. நீயும் பாஸ்போர்ட் வாங்கிடு, அண்ணியும் நீயுமா சேர்ந்து, கனடா போயிட்டு வாங்க.

சும்மா கிண்டல் பண்ணாதே ஜெய். என் கவலையே, அப்புறம் இங்க இருக்குறதெல்லாம் என்ன செய்யிறதுன்னு?. இதைப் பார்த்து சின்ன மகனும் மருகமளும் ஆஸ்திரேலியா கிளம்பலாம். அப்புறம் டாக்டர் ஆன என் மருமகனுக்கும் வெளிநாட்டு மோகம் வந்திடும்.

உன் கவலையெல்லாம் சரிதான். வெளிநாட்டு வாழ்க்கைதான் சொர்கம்னு நினைக்குற பிள்ளைகளை எப்படி திருத்தறது? சமீபத்துல, கொரோனாவுக்கு இறந்த, பெத்தவங்களுக்கு, சாஸ்திரிகளுக்கு பணத்தை அனுப்பி, வீடியோ கால்லேயே, காரியம் பண்ணினாங்களாம் அமெரிக்காவுல இருந்து. அவ்வளவுதான் வாழ்க்கை.

எதுக்காக இப்படி ஓடுறாங்கன்னு தெரியலை. எழுத்தாளர் சுஜாதா, தான் காலமாகும் சில வருஷம் முன்பு ஒரு பதிவுல கூறி இருந்தாரு, “இரண்டு மகன்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு, இரண்டுமுறை பைபாஸ் சர்ஜரி செஞ்சுகிட்ட வருத்தத்தோட சொல்றேன். இந்த வெளிநாட்டு மோகம் எதுக்கு? அந்த வலியும் வேதனையுமே இப்ப பல பெற்றோர்களுக்கு இருக்கு”ன்னு.

“உனக்கொன்னு தெரியுமா, நானும் ஒரு பதிவுல பார்த்தேன். அப்பாவும் அம்மாவும் ஸ்கூல் டீச்சர்ஸ். பெண்ணும் பிள்ளையும் அமெரிக்காவுல, ஆட்டோவுல கூட போகாம, கால் வலிக்க நடந்துதான் எங்கேயும் போவாங்களாம். அவுங்க இறந்த பின்னான வந்த பெண்ணுக்கும் பிள்ளைக்கும் ஏதோ, சட்டபடி இயலாதுன்னு சொல்லி, சொத்த வித்து, சேமிப்புல இருந்த மொத்த பணத்தையும் சேர்த்து, திருப்பதி உண்டியல்ல போட்டுட்டு அமெரிக்கா பொயிட்டாங்களாம். சரி சரி மனசை தளர விடாம வேலையைப் பாரு. சின்சு இப்ப இந்த சூழ்நிலையை நம்பித்தான், சென்னை கோயம்புத்தூர் ஆகிய ஊர்கள்ல ரிடையர்மெண்ட் ஹோம் நிறைய வந்தாச்சு. ஓல்ட் ஏஜ் ஹோமை விட இதுவெல்லாம் நிறைய வசதியோட இருக்கு. டாக்டர் வசதி அது இதுன்னு எல்லாத்தோட”.

‘இல்ல ஜெய், எங்க அப்பன் பாட்டன் செஞ்சு வெச்சிருக்கிற, கோயில் குளத்துக்கான தரும காரியங்கள் இருக்கு. உனக்கே தெரியுமில்ல, எங்க குடும்பம் இந்த ஊருல பத்து தலைமுறைக்கு மேல வாழுது. எங்கு பங்கு பங்காளி தலைகட்டு, அக்கம் பக்கம் எல்லாம் இருக்கு. போகட்டும் காலம் தான் பதில் தரவேண்டும். இவர்களது அறியாமைக்கும் மோகத்துக்கும் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்,

நின்றால் இரண்டடி, இருந்தால் நான்கடி,

படுத்தால் ஆறடி, அவ்வளவுதான் தேவை மனிதனுக்கு!’

‘இது புரிந்தால், ஏது கஷ்டம்?’ என்றவாறு ஜெயசங்கரன் நகர, சின்னச்சாமியும் ஒரு பெரு மூச்சை உதிர்த்தவாறு விட்டினுள் சென்றான்.

- **கவிஞர் கவிவளவன்.**
  **26-02-2022**